1972 ஆகஸ்ட் 12]

(இ) 1972 ஜனவரி மாதம் 13, 14, 15, 16-ந் தேதிகளில் அதில் எத்தனை பேர்கள் வேலை செய்தார்கள்? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலித்தொகை மேலே குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *(அ) 1971-72-ல் வந்தவாசி வட்டாரத்திற்கு ரூ. 1.25 லட்சம் ஒதுக்கப்பட்டது.*

(இ) 1972-ஆம் ஆண்டு ஜனவரி 13, 14, 15, 16 தேதிகளில் இத்திட்டத்தின் கீழ் பணி புரிந்தவர்களின் எண்ணிக்கைபற்றிய புள்ளிவிவரமும், அந்த நாட்களில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியங்களும் வருமாறு :—

நாள்.	நபர்கள்.	அளிக்கப்பட்ட ஊதியம்.
(1)	(2)	(3)
1972 சனவரி 13ம் தேதி ..	426	1,278·00
1972 சனவரி 14ம் தேதி ..	427	1,281·00
1972 சனவரி 15ம் தேதி ..	427	1,281·00
1972 சனவரி 16ம் தேதி	427	1,281·00
மொத்தம் ..	1707	5,121·00

பள்ளிகளில் மத போதனை.

** 90 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—*

கல்வியின் பெயரால் பள்ளிகளில் நடைபெறும் மத போதனைகளை அகற்றிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *இந்திய அரசியல் சட்டத்தின் படியும் தமிழ்நாட்டுக் கல்வி விதிகளின்படியும் அரசுக் கல்வி நிலையங்களிலும் உள்ளாட்சி மன்றக் கல்வி நிலையங்களிலும் பொதுவாக மதபோதனை செய்யத் தடை உள்ளது.*

அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசு மானியம் பெறும் தனியார் கல்வி நிலையங்களிலும் எந்தெந்த மாணவர்கள் (அவர்கள் வயது வராதவர்களாயிருப்பின் அன்னூர் காப்பாளர்கள்) மத போதனை பெற ஒத்துக் கொள்கிறூர்களோ அவர்களுக்கு மட்டுமே சில நிபந்தனைகளுக்குட்பட்டு மத போதனை அளிக்கலாம்; அத்தகைய மத போதனையை கல்வி நிலைய வேலை நேரத்தில் அளிக்கக்கூடாது.

எந்தக் கல்வி நிலையமாவது மேற்கண்டவற்றை மீறி நடப்பது பள்ளிக் கல்வித் துறைக்கோ அல்லது அரசுக்கோ தெரியப்படுத்தப்பட்டால் அத்துறைகள் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : மத போதனை நடத்தப்படுவதைப் போல நாத்திகப் பிரச்சாரமும் நடைபெறுவதற்குக் கல்வித் துறையில் அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத போதனை நடத்துவதற்கு பள்ளி நேரங்களில் இடம் இல்லை. மத போதனை எல்லோருக்கும் நடத்தவும் முடியாது. குறிப்பிட்டவர்கள் இன்ன மத போதனை தங்களுக்கு வேண்டும் என்று எழுதிக் கேட்டு, வகுப்பு நேரங்கள் போக மற்ற நேரங்களில் செய்யலாம். ஆனால், 'நாத்திகம்' என்பது ஒரு மதமாக இல்லை. அது ஒரு கருத்தாகத் தான் இருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : வேலூரிலுள்ள ஊர்ஹிஸ் கல்லூரி போன்றவற்றில் மத போதனை மட்டுமல்ல, மத சம்பந்தமான சினிமாக் காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன. அதுவும் பாட நேரங்களில்—திங்கட்கிழமைதோறும் முதல் 'பீரியட்' மதம் பற்றிய படக் காட்சிகளோ மத போதனையோ நடத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே விதிமுறைகள் இருக்கின்றன. மத போதனை விரும்புகிறவர்களுக்கு மட்டும் செய்யலாம். வகுப்பு நேரங்களில் மத போதனை செய்யக்கூடாது. விரும்புகிறவர்களுக்குத் தவிர மற்றவர்களையும் வற்புறுத்தும் நிலை இருக்குமானால் அது பற்றி முறையீடு அளிக்கப்படுமானால் அதன் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 91 முதல் 95 வரையுள்ள வினாக்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தபிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Sugar Control

*96 *Q.*—THIRU N. DENNIS :
THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to urge on the Union Government to impose partial control on sugar; and

(*b*) if so, the details thereof?